1994 ஏப்ரல் 27]

மக்கள் இங்கே வாழ்கிறார்கள் என்றால் 5 கோடி மக்களுக்கும் காவலர் என்று வைக்க முடியாது. எனவே, வன வளத்தை எடுத்துச் செல்வதைத் தடுப்பதற்கு எந்த வகையில் அதிமுக்கியத்துவம் கொடுத்து தடுக்க முடியுமோ அதைத் தடுப்பதற்கு நாம் செவ்வனே செயலாற்றி வருகிறோம். எனவே, அது தடுக்கப்பட்டு வருகிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நாடு சுதந்திரம் அடைந்த நேரத்தில் தமிழகத்தைப் பொறுத்தவரை 14 சதவிகிதம் தான் இங்கே வனம் இருந்தது. ஆனால் இன்றைக்கு 17 சதவிகிதத்திற்கு அதிகமாக வனங்கள் இருக்கின்றன. சமூக வனங்களை உருவாக்கியதன் மூலமாக மேலும் 3 சதவிகிதம் நாம் அதிகமாக உருவாக்கியிருக்கிறோம். இன்றைக்கு தேசிய அளவிலே தமிழகத்தில் தான் வனங்கள் சிறப்பாகப் பாதுகாக்கப்படுகின்றன என்பதும், மத்திய அரசினுடைய அண்மைக் கால புள்ளிவிவரங்களிலிருந்து தமிழக வனத் துறை குறித்து சிறப்பான கருத்துக்களை மத்திய அரசு - இன்றைக்கு அவர்கள் தெரிந்து வைத்து இருக்கிறார்கள். இன்றைக்கு மாநில அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்து, இதைச் செய்கிற நேரத்தில், மத்திய-மாநில அரசுகள் சம்பந்தப்பட்ட இந்த வன வளங்களைப் பாதுகாப்பதற்கு மத்திய அரசு அதிக நிதி ஒதுக்கித் தர வேண்டுமென்று இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 413, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

413—

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைத்தல்.

**24964—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை:*

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) பணி எப்பொழுது முடிவடையும் ?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1994 ஏப்ரல் 27

(அ) கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை நிறுவத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள விவேகானந்தர் பாறைக்கு அருகில் உள்ள சிறிய பாறை சமப்படுத்தப்பட்டுள்ளது. சிலை அமைப்பதற்கான பீடம் மற்றும் சிலை நிறுவும் பணி தொடங்கப்படவுள்ளது.

(ஆ சிலை நிறுவும் பணி 1995 ஆம் ஆண்டு செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதம் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின் – போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்"

என்ற பெருமையுடைய பொது மறையை அருளிய திருவள்ளுவருக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க கன்னியாகுமரியில் அமைய இருக்கும் திரு உருவச் சிலையை தமிழகத்தின் நிரந்தர முதல்வர், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கரங்களால் இந்த ஆண்டே திறந்து வைக்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் சிலையைப் பொறுத்தமட்டில், அங்கே சிலை வைப்பதற்காக 14-4-79 அன்று அன்றைக்குப் பிரதம அமைச்சராக இருந்த திரு. மொரார்ஜி தேசாய் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. பின்னர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் அந்தச் சிலை அமைப்பதற்கு 432 இலட்சத்தில் தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்குப் பின்னாலே வந்தவர்கள் அங்கே இருக்கிற பாறையை அகற்றி, சமப்படுத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் நம்முடைய முதலமைச்சர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்புக்கு வந்ததற்குப் பிறகு அந்தப் பாறையை நீக்கி, சீரமைக்கும் பணி நடந்து, சமப்படுத்தப்பட்டிருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அந்தப் பாறையை வெடிகுண்டு வைத்து சமப்படுத்தியிருந்தால் எப்போதோ முடிந்திருக்கும். ஆனால் விவேகானந்தர் பாறைக்கு அது பாதிப்பாக இருக்கும் என்ற கோரிக்கை வந்த காரணத்தால், அந்தப்

1994 ஏப்ரல் 27]

பணியை பொதுப் பணித் துறையைச் சேர்ந்தவர்கள் மிகவும் சிரமமான முறையிலே செய்து, சமப்படுத்தியிருக்கிறார்கள். 133 அடி உயரத்தில் அந்தச் சிலை அமைக்கும் பணி இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதுவரைக்கும் 2 கோடியே 31 இலட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு தடங்கல் இப்போது அந்தப் பணியிலே ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசின் கலங்கரை விளக்கம் மற்றும் சிறு கலங்கள் துறையின் இயக்குநர் 10.3.94 நாளிட்ட கடிதத்தில், அந்தத் திட்டப் பணியை நிறுத்தி வைக்குமாறு கடிதம் எழுதியுள்ளார். நம்மைப் பொறுத்தவரையிலும் ஏறத்தாழ 2 கோடியே 31 இலட்சம் செலவு செய்துவிட்டோம். ஆகவே அதற்கு அனுமதி தர வேண்டுமென்று நம்முடைய தலைமைச் செயலாளர் மத்திய தரைவழிப் போக்குவரத்துச் செயலருக்கு 25-3-94 நாளிட்ட கடிதத்தில் எழுதியுள்ளார். மத்திய அரசிடமிருந்து இன்னும் பதில் கிடைக்கப்பெறவில்லை. ஆகவே சிலை அமைக்கும் பணியிலே மத்திய அரசினுடைய கடிதம் தடையாக உள்ளது. அந்தத் தடை நீக்கப்படுமானால் நிச்சயம் நீங்கள் விரும்பும் தேதியில் அந்தச் சிலை அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் சிலை அமைவதற்கு மத்திய அரசு இப்போது தடைக்கல்லாக இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தத் தடையை விரைவிலே நீங்கள் நீக்கித் தர வேண்டும். அந்தச் சிலை அமையும்போது 1330 அரும் குறள்களையும் அந்தப் பீடத்தில் பொறிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் கடிதம் எழுதி இருக்கிறோம். இன்னும் அந்தக் கடிதத்திற்குப் பதில் வரவில்லை. 1330 குறளும் அந்தப் பீடத்திலே அமைக்கப்படுமா என்று கேட்டார். 133 அடி உயரத்தில் அமைய இருக்கிற அந்தப் பீடத்தில் 266 குறட்பாக்களைப் பொறிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 414, திரு. இராம. இராமநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.